

The Times Of India ஒருங்கிணைத்த மாணவர்களுக்கான அறிவியல் திறன் போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு 'கல்வி என்பது மாணவர்களுக்கு பகுத்தறியும் உணர்ச்சியையும், நல்ல பணிக்கு செல்வதற்கான அறிவையும் கொடுக்க வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கூற்றை வலியுறுத்தி உரையாற்றி, மாணவச் செல்வங்களுக்கு பரிசுகள் வழங்கினார். மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதமாக ஆண்டுதோறும் #VISTA எனும் போட்டியை ஒருங்கிணைக்கும் @TIMESOFINDIA நிறுவனத்திற்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியில் கழகத்தினர் முழுமையாக ஈடுபடுவீர் !

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!



காஞ்சிபுரம் நவ. 22 - வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்தலுக்கான சிறப்பு முகாமை கழகத்தினர் மேற்கொள்ள வேண்டும் என காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கையில், கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகின்ற 2025 ஜனவரி 1ஆம் தேதி அன்று 18 வயது நிறைந்தவர்கள் தங்களது பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்குதல் திருத்தம் செய்தலுகான சிறப்பு முகாம் 16.11.24 மற்றும் 17.11.24 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட்டதைப் போன்று இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் எதிர்வரும் 23.11.2024, 24.11.2024 ஆகிய தேதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும் என தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதன்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தல், மற்றும் நீக்குதல், தொடர்பான சிறப்பு முகாம் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

எனவே மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இப்பணிகளில் பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## நொளம்பூர் வே.ராஜன் - வி.வி.கிரிதரன் - எஸ்.ரமேஷ்ராஜ் பங்கேற்பு

# மதுரவாயல் தொகுதியில் ரூ.50 லட்சம் மதிப்பில் பல்நோக்கு புதிய கட்டிடம்!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

சென்னை, நவ. 22 - மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு148, நெற்குன்றம், கோதண்டபாணி நகர், வாஞ்சிநாதன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2022-2023) கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைத்தார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு148, நெற்குன்றம், கோதண்டபாணி நகர், வாஞ்சிநாதன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2022-2023) கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று (21.11.2024 ) காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இதில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பல்நோக்கு கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# சேலம் கிழக்கில் சதுரங்கப் போட்டி துவக்க விழா!

சேலம், நவ. 22 - சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான இளையோர் சதுரங்கப் போட்டி டிசம்பர் 22ஆம் தேதி நடைபெறுவதையொட்டி வலைதள தொடக்க விழா நிகழ்ச்சி வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ் தலைமையில் வலைதள பக்கத்தை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கருணாநிதி, சுரேஷ்குமார், சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம், முனைவர் அ.சீனிவாசன், முத்துலிங்கம், தமிழ்செல்வன், சோமசுந்தரம், சங்கர், கோபால், வரத. ராஜசேகர், தனசேகரன், ராஜவேல், வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், பாலசுப்பிரமணியன், வேல்முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டை லட்சுமண பெருமாள், முனைவர் தங்கபாண்டியன், ஏற்காடு ரமேஷ் பாபு, செல்வகுமார், ஆவின் செல்வமணி, கிருஷ்ணவேணி செய்தனர்.



கோவை மாநகர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக திருச்சி, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**23/11/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 05:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | ரத்னா காம்ப்ளக்ஸ், ஆஸ்பத்திரி சாலை, துறையூர். |
| மாலை 05:45 மணி | பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா. | திருச்சி சாலை, துறையூர். |
| மாலை 06:00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா. | பேருந்து நிலையம், துறையூர். |

**24/11/2024 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024

